සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

11 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | |
|---|---|
| බුද්ධ ධර්මය | I, II |
| பௌத்தம் | I, II |
| Buddhism | I, II |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## பௌத்தம் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** "பிக்குமாரே உங்களுக்குத் தற்போது தாயொருவர் இல்லை. தந்தையொருவர் இல்லை. எனவே இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் ஒருவருக்கொருவர் உதவியாக ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்" என புத்தர் குறிப்பிட்டது,
(1) பூதிகத்ததிஸ்ஸ தேரரை அடிப்படையாகக் கொண்டாகும்.
(2) மகா காஷ்யப தேரரை அடிப்படையாகக் கொண்டாகும்.
(3) வயிற்றுவலியால் உழன்ற பிக்கு ஒருவரை அடிப்படையாகக் கொண்டாகும்.
(4) மகா ரஹத்தர் முகலனை அடிப்படையாகக் கொண்டாகும்.

**2.** புத்தரையும் தர்மத்தையும் சங்கரத்தினத்தையும் குறைகூறிக் கொண்டு வந்த துறவியும் அவற்றின் நிறைகளைக் கூறிக் கொண்டு வந்த மாணவரும் முறையே யாவர்?
(1) பிரம்மதத்தரும் ஸுப்ரபுத்தரும்
(2) ஸுப்பியரும் பிரம்மதத்தரும்
(3) ஸுப்பியரும் இஸிதத்தரும்
(4) ஸுப்பியரும் ஸோணதண்டரும்

**3.** புத்தர் பத்தாவது மழைக் காலத்தைக் கழித்தது,
(1) பரணஸ இஸிபதன மிகதாவிலாகும்.
(2) விஸாலா பட்டின குடாகார மண்டபத்திலாகும்.
(3) பாரிலெய்ய வனத்திலாகும்.
(4) சவத் பட்டின வேலுவனராமயவிலாகும்.

**4.** உரத்த குரலில் பேசினால் புத்தர் தனது மடத்திற்கு வரமாட்டார் என நினைத்து சத்தம் செய்யவேண்டாம் எனக்கூறி தனது சிஷ்யர்களை அமைதியாக இருக்கச் செய்தவர்,
(1) சோணதண்ட பிராமணர் (2) பொட்டபாத துறவி (3) உபக ஆஜீவக்க (4) சஞ்சய துறவி

**5.** புத்தர், எந்த பிக்குவை அடிப்படையாகக் கொண்டு நோய் பரவுவதற்கான எட்டு காரணங்களை உபதேசித்தார்?
(1) கிரிமானந்த தேரரை
(2) ஆனந்த தேரரை
(3) மகா காஷ்யப தேரரை
(4) மகா முகலன் தேரரை

**6.** "ஸத்ஹட வன பவ துகட வெதாணன்" எனும் லோவடசங்கரா கவிதை அடிக்கு அமைவாக புத்தர்,
(1) பிராணிகளின் உடலியல் நோய், துன்பங்களுக்கு மேலானதொரு வைத்தியராயிருந்தார்.
(2) பிறவித் துன்பத்திற்குச் சிகிச்சையளிக்கும் மேலானதொரு வைத்தியராயிருந்தார்.
(3) உயரிய சத்திரசிகிச்சை வைத்தியராயிருந்தார்.
(4) பிராணிகளுக்கு ஏற்படும் அனைத்து நோய் நொடிகளுக்கும் சிகிச்சையளிக்கும் மேலானதொரு வைத்தியராயிருந்தார்.

**7.** மஹா ரஹத்தரான சாரிபுத்த, புத்த சாசனத்தில் துறவு பூண்பதற்கு முன்னர் துறவியாயிருந்தது,
(1) உபதிஸ்ஸ துறவியிடமாகும்.
(2) கோலித துறவியிடமாகும்.
(3) உபக ஆஜிவக துறவியிடமாகும்.
(4) சஞ்சய துறவியிடமாகும்.

**8.** போதிசத்துவர் தான பரமத்த பாரமிதாவை நிறைவு செய்தார் என்பதனை வெளிப்படுத்தும் ஜாதகக் கதையாவது,
(1) ஸஸ ஜாதகம்
(2) ஸிவி ஜாதகம்
(3) வெஸ்ஸன்தர ஜாதகம்
(4) மகாதேவ ஜாதகம்

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**9.** தானே கடைப்பிடித்து, கண்முன்னே பலாபலனை இவ்வுலகிலேயே கண்டு கொள்ள முடியுமென்பதனால் தர்மமானது
(1) ஓபனயிகவாகும். (2) ஸந்திட்டிகமாகும். (3) அகாலிகமாகும். (4) எஹிபஸ்ஸிகமாகும்.

**10.** மும்மணிகள் பற்றிய விடயங்களைத் தெரிந்து கொண்டு, அதிலிருந்து பெற்றுக்கொள்ளும் தெளிவு
(1) அமூலிகா சிரத்தா எனப்படும். (2) துன்தரா போதி எனப்படும்.
(3) அவெச்சப்ப ஸாத எனப்படும். (4) பக்தி எனப்படும்.

**11.** மும்மணிகளின் குணங்கள் எத்தனை?
(1) ஒன்பது (2) பதினாறு (3) இருபது (4) இருபத்தி நான்கு

**12.** உள்ளத்திலோ உடலிலோ தூக்க குணமுடைமை, சோம்பேறித்தனம் என்பன இருக்குமாயின் படித்த விடயம் நினைவுக்கு வரமாட்டாது. இந்தத் தூக்கமுடைமையும் சோம்பேறித்தனமும்
(1) தீன மித்த எனப்படும். (2) விசிகிச்சா எனப்படும். (3) காமச்சந்த எனப்படும். (4) வியாபாத எனப்படும்.

**13.** 'சமத' தியானத்தினால் கிடைக்கும் பிரதிபலன் **அல்லாதது**
(1) ஞாபக சக்தி அதிகரித்தல்
(2) ஒழுங்கான முறையில் ஏதாவதொன்றை முன்வைக்க முடியாமலிருத்தல்
(3) மூன்று லட்சணங்களுக்கு அமைவாக உலகைப் பார்த்தல்
(4) விரைவில் புரிந்து கொள்ளக்கூடிய சக்தி அதிகரித்தல்

**14.** "தீய ஒழுக்கத்துடனும் குழப்பமான மனநிலையுடனும் நூறு வருடங்கள் வாழ்வதைவிட நல்லொழுக்கத்தோடும் அமைதியான உள்ளத்தோடும் ஒரு நாள் வாழ்வது உயர்ந்ததாகும்" என்ற கருத்தை உள்ளடக்கும் தம்மபத காதாவின் முதல் இரு அடிகளாவன,
(1) "அசரித்வா ப்ரஹ்மசரியங் - அலத்தா யொப்பனே தனங்"
(2) "யொசே வஸ்ஸதங் ஜீவே - துஸ்ஸீலோ அஸமாஹிதோ"
(3) "ஸுஸுகங் வத ஜீவாம - வேரினேஸு அவேரினோ"
(4) "ஸுபானுபஸ்ஸிங் விகரந்தங் - இந்திரியேஸு அஸங்வுதங்"

**15.** மறுபிறப்பிற்கு இட்டுச் செல்லும் கர்மமாவது,
(1) ஜனக கர்மம் (2) உபத்தம்பக கர்மம் (3) உபபீடக கர்மம் (4) உபகாதக கர்மம்

**16.** வறிய குடும்பத்தில் பிறக்க நேரிட்டாலும் பெரும் அழகுடைமையால் அதிஷ்டத்துடன் கூடிய வாழ்க்கை வாழக் கிடைப்பது,
(1) உபதி சம்பத்தியினாலாகும். (2) கால சம்பத்தியினாலாகும்.
(3) பிரயோக சம்பத்தியினாலாகும். (4) ஜாதி சம்பத்தியினாலாகும்.

**17.** ஒரு நபரின் சிந்தனை செய்வதற்கும் ஆராய்வதற்குமான உரிமையையும் சுதந்திரத்தையும் மதித்து, புத்தபகவான், கேசபுத்தறியக் கிராமவாசிகளுக்கு உபதேசித்த சூத்திரம்
(1) வியக்கபஜ்ஜ சூத்திரம் (2) காலாம சூத்திரம் (3) வீமங்ஸக சூத்திரம் (4) மங்கல சூத்திரம்

**18.** சுல்லகம்ம விபங்க சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றவர்களின் சுகத்தைக் கண்டு பொறாமைப்படுவதால் கிடைக்கும் பிரதிபலனாவது,
(1) குறைந்த வயதில் இறந்து போதல் (2) இழி குலங்களில் பிறத்தல்
(3) ஏழையாகப் பிறத்தல் (4) கோர வர்ணத்தில் பிறத்தல்

**19.** "மீண்டும் உலகியல் வாழ்வில் இணையாதிருப்பதால் மறுபிறப்பு இல்லை எனக் குறிப்பிடும் படிலோம படிச்ச சமுப்பாத போதனையாவது,
(1) பவ நிரோதா ஜாதி நிரோதோ (2) உபாதான நிரோதா பவ நிரோதோ
(3) தண்ஹா நிரோதா உபாதான நிரோதோ (4) வேதனா நிரோதா தண்ஹா நிரோதோ

**20.** 'பஞ்ச ஸ்கந்த' என்பது,
(1) ரூப, வேதனா, தண்ஹா, உபாதான, விஞ்ஞான (2) ரூப, வேதனா, ஸஞ்ஞா, ஸங்கார, விஞ்ஞான
(3) ரூப, வேதனா, தண்ஹா, உபாதான, பவ (4) ரூப, வேதனா, ஸஞ்ஞா, விஞ்ஞான, நாமரூப

**21.** 'விபவ தண்ஹா' என்பது,
(1) மறுமை வாழ்வு இல்லை எனும் நம்பிக்கை
(2) இவ்வுலகையும் மறுமையையும் ஏற்றுக் கொள்ளல்.
(3) மேலும் மேலும் உலகியல் சுகத்தை அனுபவிக்க வேண்டும் எனும் ஆசை
(4) இந்த உலகத்திலேயே முடிந்தளவு சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்னும் ஆசை

**22.** அகுசலம், அகுசல மூலம், குசலம், குசல மூலம், அகுசலம், அகுசல பயன், குசலம், குசல பயன் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் அறிவு, சீரிய எட்டுவகை மார்க்கத்தில்
(1) ஸம்மா கம்மந்த எனப்படும். (2) ஸம்மா ஆஜீவ எனப்படும்.
(3) ஸம்மா வாயாம எனப்படும். (4) ஸம்மா திட்ப எனப்படும்.

|பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**23.** திரி சிக்ஷாவில் சீல சிக்ஷாவுக்கு **உரித்தாகாத** மார்க்கம் எது?
(1) ஸம்மா வாயாம (2) ஸம்மா வாசா (3) ஸம்மா கம்மந்த (4) ஸம்மா ஆஜீவ

**24.** பிராணிகள் தூய்மையடைவதற்கு சோகம், வேதனைகளிலிருந்து விடுபடல், துன்பங்களிலிருந்து மீளல் ஆகியவற்றிற்கும் நிர்வாணத்தை விளங்கிக் கொள்வதற்குமான ஒரே வழியாக பௌத்த மதம் குறிப்பிடுவது,
(1) சத்தர இர்திபாத இனையாகும். (2) சத்தர கமடகன் இனையாகும்.
(3) சத்தர சங்கிரக வஸ்து இனையாகும். (4) சத்தர சதிப்பட்டான இனையாகும்.

**25.** ஆட்சியாளர் தனது மக்களினது முன்னேற்றம், மகிழ்ச்சி ஆகியவற்றைக் கண்டு உண்மையில் அது தொடர்பில் மகிழும் ஆற்றல்
(1) கருணா எனப்படும். (2) உபேக்கா எனப்படும். (3) முதிதா எனப்படும். (4) மெத்தா எனப்படும்.

**26.** மற்றவர்களது நன்மை, முன்னேற்றம் ஆகியவற்றிற்காகச் செயற்படுதல்,
(1) நன்நடத்தையாகும். (2) சமனிலையாகும்.
(3) நல்லாட்சியாகும். (4) சுயநலமின்மையாகும்.

**27.** ஆட்சியாளர் ஒருவர் ஐம்பொறிகளைத் திருப்திப்படுத்துவதில் காலத்தைச் செலவிடாது ஆளப்படுபவர்களுக்காகவும் நாட்டிற்காகவும் செய்ய வேண்டிய கடமைகளை தஸராஜ தர்மத்தில்
(1) மென்மை என்பர். (2) தவம் என்பர்.
(3) பொறுமை என்பர். (4) ஒழுக்கம் என்பர்.

**28.** நாட்டு மக்கள் செலுத்த வேண்டிய வரிப் பணம் பௌத்த சமயத்தில் அழைக்கப்படுவது,
(1) ராஜ பலி என்றாகும். (2) அதிதீ பலி என்றாகும்.
(3) தேவதா பலி என்றாகும். (4) புப்பபேத பலி என்றாகும்.

**29.** அறவழியில் சம்பாதிக்கப்பட்ட பணம் உள்ளதென எண்ணி ஒருவன் மகிழ்ச்சியடைவானாயின், அது
(1) அத்தீ சுகம் எனப்படும். (2) போக சுகம் எனப்படும்.
(3) அனன சுகம் எனப்படும். (4) அனவஜ்ஜ சுகம் எனப்படும்.

**30.** பிக்குகளுக்குப் போதிக்கப்பட்டிருப்பதற்கமைய அவர்கள் உண்ண வேண்டியது,
(1) உடல் பலத்தை அதிகரிப்பதற்காகவாகும்.
(2) உடலை அலங்கரிப்பதற்காகவாகும்.
(3) நேர்த்தியான தோற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவாகும்.
(4) சமயப் பழக்கங்களை நிறைவு செய்ய உதவுவதற்காகவாகும்.

**31.** பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்படுவதற்கு அமைவாக எழும்புவதற்கேனும் முடியாத அளவிற்கு உணவருந்தி அதிலேயே புரளுபவர்,
(1) காகமாஸக எனப்படுவார். (2) புத்த வமிதக எனப்படுவார்.
(3) தத்தா வட்டக எனப்படுவார். (4) ஆகர ஹத்தக எனப்படுவார்.

**32.** இரண்டாம் பௌத்த மகாசபைக்காக தலைமைத்துவமேற்றுச் செயற்பட்டவர்
(1) சப்பகாமீ மகா ரஹத்தர் (2) உபாலி மகா ரஹத்தர்
(3) மகா காஷ்யப மகா ரஹத்தர் (4) மகா தேவ பிக்கு

**33.** அந்தந்த தர்ம பிரிவுகளை வாய்மொழிமூலமாக பரம்பரை பரம்பரையாகப் பேணி முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு பாணக பரம்பரையினருக்கு வழங்கப்பட்டது. அதன்படி மஜ்ஜிம நிகாய பொறுப்பளிக்கப்பட்டது
(1) சாரிபுத்த தேரரின் சிஷ்ய பரம்பரைக்காகும்.
(2) மகா காஷ்யப தேரரின் தலைமையிலான சிஷ்யப் பரம்பரைக்காகும்.
(3) ஆனந்த தேரரின் தலைமையிலான சிஷ்யப் பரம்பரைக்காகும்.
(4) அனுருத்த தேரரின் தலைமையிலான சிஷ்யப் பரம்பரைக்காகும்.

**34.** மொக்கலீபுத்த திஸ்ஸ மகா ரஹத்தரினால் தொகுக்கப்பட்டு, அபிதர்ம பிடகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது,
(1) பட்டானப்பகரணமாகும். (2) யமகப்பகரணமாகும்.
(3) விபங்கப்பகரணமாகும். (4) கத்தாவத்துப்பகரணமாகும்.

**35.** மகிந்தரின் வருகையினால் ஏற்பட்ட விளைவாகக் **கருதப்படாதது**
(1) உள்நாட்டுப் பிக்கு சமூகம் உருவானமை
(2) மகா விகாரையை மையமாகக் கொண்ட கல்விமுறை தொடங்கப்பட்டமை
(3) அரச நிர்வாகம் பிக்குகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டமை
(4) செதுக்கல், சிற்பக் கலைகள் தோன்றியமை

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**36.** 'எனது இந்த முயற்சி புத்த சாசனம் நீண்ட காலம் நிலைபெற வேண்டுமென்பதற்காகவேயன்றி ஒருபோதும் அரச சுகத்திற்காகவல்ல' என்ற கூற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட ஆட்சியாளர் யார்?
(1) வலகம்பா மன்னன் (2) தாதுசேன மன்னன்
(3) மகா பராக்கிரமபாகு மன்னன் (4) துட்டகைமுனு மன்னன்

**37.** பன்சியபனஸ் ஜாதக புத்தகம் எழுதப்பட்டது,
(1) பொலன்னறுவைக் காலத்திலாகும். (2) தம்பதெனிய காலத்திலாகும்.
(3) குருணாகல் காலத்திலாகும். (4) அனுராதபுரக் காலத்திலாகும்.

**38.** 'அனாபத்த' புத்த சிலைக்கு ஓர் உதாரணமாவது,
(1) அவுக்கன புத்தர் சிலை (2) மாலிகாவில புத்தர் சிலை
(3) தொலுவில புத்தர் சிலை (4) சஸ்ஸேருவ புத்தர் சிலை

**39.** ஆமலகாகார தாதுகோப கர்ப்பத்தின் தோற்றத்தின்படி அது,
(1) தாமரையின் வடிவத்தைப் பெறும். (2) நெல்லிக் கனியின் வடிவத்தைப் பெறும்.
(3) கலசத்தின் வடிவத்தைப் பெறும். (4) மணியின் வடிவத்தைப் பெறும்.

**40.** "புத்த சாசனத்தைக் காப்பாற்றுவதற்காக இன்னும் இருபத்தைந்து முறை இந்த தம்பதிவவில் பிறக்க வேண்டும்" என்ற வேண்டுதலைச் செய்தவர் யார்?
(1) ஹென்றி ஸ்டீல் ஓல்கட் (2) ரேருக்கானே சந்தவிமல மகாநாயக்க தேரர்
(3) மிகெட்டுவத்தே குணானந்த தேரர் (4) ஸ்ரீமத் அனாகாரிக தர்மபால

* *

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

11 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

## பௌத்தம் II

※ **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) "இத்தகையதொரு மகனைப் பெற்ற தாய் தந்தையர் ஆறுதலுடையவராவர்" என்றவாறு நிப்புத பதங்களை இயம்பியவர் யார்?

(ii) "இமஸ்மிங் ஸதி இதங் ஹொதி, இமஸ்மிங் அஸதி இதங் ந ஹொதி" என்ற அடியின் கருத்தை எழுதுக.

(iii) **நான்கு** 'அகதி'களைப் பெயரிடுக.

(iv) "தானங் ச தம்மசரியா ச - ஞாதகானஞ்ச ஸங்கஹோ" எனும் செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ள மங்கல விடயங்கள் **இரண்டினை** எழுதுக.

(v) பௌத்த சமயம் போதிக்கும் 'அனன ஸுக' என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(vi) பௌத்த சமயம் காட்டும் சிரித், விரித் என்பவற்றை விளக்குக.

(vii) புத்த பகவான் வஜ்ஜி அரச குமாரர்களுக்கு அறிமுகப்படுத்திய அரச பரிபாலனக் கொள்கை யாது?

(viii) புத்தர் சிலைகள் முக்கியமாக மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றுள் **இரண்டினை** எழுதுக.

(ix) பொலன்னறுவை இலக்கிய காலத்தில் புத்தரின் 'புரிஸ தம்ம சாரதி' குணத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்ட உரைநடை ஆக்கத்தினையும் அதன் ஆசிரியரையும் பெயரிடுக.

(x) இங்கிலாந்தில் பாளி நூல் சங்கம் (Pali Text Society) யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

**2.** (i) சிகாலோவாத சூத்திரத்தில் கிழக்கு, தெற்கு ஆகிய திசைகளுக்கு உவமிக்கப்பட்டவர்கள் யாவர்?

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட சமூகக் குழு ஒன்றினால் உமக்கு நிறைவேற்றப்பட வேண்டிய **மூன்று** கடமைகளை எடுத்துக்காட்டுக.

(iii) "பரஸ்பரம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதனால் முழு சமூகமும் முன்னேற்றமடையும்." ஆராய்க.

**3.** (i) ஒருவரின் புகழை அதிகரிப்பதற்கு உதவும் விடயங்களில் கவனம் செலுத்தி போதிக்கப்பட்ட தம்மபத செய்யுளை எழுதுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட செய்யுளின் கருத்தை எழுதுக.

(iii) "தம்மபதம் முழு மனித இனத்திற்குமே பயன்படுத்தத்தக்க பெறுமதி வாய்ந்த உபதேசங்களை உள்ளடக்கிய நூலாகக் கருதப்படத்தக்கது." ஆராய்க.

**4.** (i) பயன் தரும் காலத்திற்கு ஏற்ப கர்மங்கள் நான்கு வகைப்படும். அவற்றுள் **இரண்டினை** எடுத்துக்காட்டுக.

(ii) "சேத்தனாஹங் பிக்கவெ கம்மங் வதாமி" என்ற வரியின் அடிப்படையில் கர்மம் பற்றிய பௌத்த போதனையை விளக்குக.

(iii) நல்ல, தீய கர்மங்கள் பற்றிய அறிவு இவ்வுலக, மறுமை வாழ்வை பயனுள்ளதாக்கிக்கொள்வதற்கு உதவும் வகையினை விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**5.** (i) நபரொருவரின் இவ்வுலக மனமகிழ்வுக்காக வியக்க பஜ்ஜ சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **இரண்டு** விடயங்களை எடுத்துக்காட்டுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டவற்றுள் ஏதேனும் ஒரு விடயத்தை விளக்குக.

(iii) அதில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் உலகியல் வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணமாகும் வகையினைத் தெளிவுப்படுத்துக.

**6.** (i) மூன்றாவது பௌத்த மகா சபை நிகழ்வதற்கு வழிவகுத்த காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

(ii) அந்தச் சபை நடைபெற்ற இடத்தையும் அதற்கு அரச அனுசரணை வழங்கிய ஆட்சியாளர், தலைமைத்துவம் வகித்த அரஹத்தர் ஆகியோரையும் பெயரிடுக.

(iii) "மூன்றாம் பௌத்த மகாசபையின் பிரதிபலனாகவே பௌத்த சமயம் சர்வதேச ரீதியில் பரவலடைந்தது." விளக்குக.

**7.** பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **இரண்டுக்கு** மட்டும் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வலிவிட்ட சரணங்கர தேரர்

(ii) நால்வகை சங்கிரக வஸ்துக்கள்

(iii) மாத்தளை அலுவிகாரை மகாசபை

(iv) சந்திரவட்டக்கல்

* * *

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/